


மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி "தமிழ்நாடு தலைகுனியாது" திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், தலைமைக் கழக பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம இளங்கோவன், ஜி.என்.ரவி மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணைச் செயலாளர் மு.ஞானவேலன், மயிலாடுதுறை நகரச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம். மூர்த்தி, ஞான இமையநாதன், ப.முருகமணி, என்.இளையபெருமாள், கு.வைத்தியநாதன் மற்றும் பலர் உள்ளனர்.




திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அவினாசி சட்டமன்றத் தொகுதி, அவினாசி நகராட்சியில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பா.ஜ.க. துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாவட்டக் கழக பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா கண்டன உரையாற்றினார். இதில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – அதற்கு ஒத்து ஊதி துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, நாகை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில், பிப்ரவரி 12 நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் பேசினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், இல.மேகநாதன் மற்றும் கூட்டணிக் கட்சி தலைவர்கள் உள்ளனர்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜ வீதி, தேர்நிலை திடலில் "தமிழ்நாடு தலைகுனியாது" பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில், பெரியகடை பகுதிக் கழகப் பொறுப்பாளர் மார்க்கெட் மனோகரன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கடலூர் புகழேந்தி சிறப்புரையாற்றினார். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

